மங்கள வைபவங்களுக்கு
ஏற்ப பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 15 வெள்ளிக்கிழமை (28 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 62

## மெதடிஸ்த சபைத் தலைவர் ஆயர் கெனத்துடன் வருவார்

அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் வண. கெனத் பெர்னாண்டோ தமது துணைவியாருடன் விமான மூலம் எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருப்பதாக தகவல் அனுப்பியுள்ளார்.

அவருடன் மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் வண. இங்ஸ்லி முத்தையாவும் இங்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிலிக்கன் ஆயருடன் அவரது துணைவியார் சித்திரா பெர்னாண்டோ, வண. ரியான்சி பெரேரா, வண. டொனால்ட் கனகரத்தினம் ஆகியோரும் இங்கு வரவிருக்கின்றனர்.

5 ஆம் திகதி பலாலி வந்து சேரும் ஆயர் கப்பல் வசதி கிடைக்குமாயின் அன்றே பருத்தித்துறைக்கு வந்து சேர்வார் என்றும்—

இல்லையேல் மறுநாள் பருத்தித்துறையை வந்தடைவார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னதாக மாத முற்பகுதியில் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த மற்றும் 11 குருமார்கள் களாவிலாடாக யாழ்ப்பாணம் வந்து சேருவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பேச்சுக்கு வழி செய்ய கைதிகளை விடுவியுங்கள்!

### புலிகளிடம் பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜன. 28
சமாதானப் பேச்சுக்களுக்கு வழிவகுக்கும் முதல் நடவடிக்கையாக—

தமது காவலில் உள்ள படையினரையும் பொலீஸாரையும் விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும்.

—இவ்வாறு ஏ. எவ். பி. மற்றும் யு. என். ஐ. செய்தி ஸ்தாபனங்களுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

''நடந்தது போதும் இந்த அர்த்தமற்ற இரத்தம் சிந்துதலுக்கு முற்றுப் புள்ளிவைக்கும் காலம் வந்து விட்டது.'' —என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீணான இரத்தக்களரியை தவிர்க்கவும்—

சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்முயற்சி எடுக்க வழி செய்யும் விதத்திலும்—

தமது பாதுகாப்பில் உள்ள பொலீஸாரையும் இராணுவத்தினரையும் புலிகள் விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலி

(3ஆம் பக்கம் பார்க்க)

## "புளொட்" அதிருப்தியாளர் கொழும்பில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன. 28
இலங்கை அரசுக்கு ஆதரவாக இயங்கும் புளொட் அமைப்பில் இருந்து விலகி தனி அமைப்பு ஒன்றை ஆரம்பித்தவர் எனக் கூறப்படும் உமா பிரகாஷ் என்ற தமிழ் இளைஞரை, அடையாளம் தெரியாத இருவர் நேற்று கொழும்பில் அவரது வீட்டுக்கு வெளியே வைத்து படுகொலை செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

புளொட் இயக்கத்தவரே இக்கொலையைச் செய்திருக்கக் கூடும் எனப் பலமாகச் சந்தேகிக்கப்படுவதாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

'புளொட்' அமைப்பின் முன்னாள் உறுப்பினரான இவர் படையினருடன் தலைநகரில் விடுதலைப் புலிகளைத் தேடி படையினர் எடுத்த சோதனை நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அதிகாலையில் தமிழர் வாழும் பகுதிகளில் திடீர் சோதனை நடத்துவது போன்ற நடவடிக்கைகளிலும் —

அடையாளம் தெரியாத வாகனங்களில் வருபவர்களினால் மக்கள் கடத்தப்படுவது போன்ற நடவடிக்கைகளிலும் உமா பிரகாஷ் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் தமிழ் வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின. (உ-எ)

# யாழ். மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு அரசுடன் தொடர்பு கொண்டு உதவுவேன்!

### கல் வீச்சு!

கொழும்பு, ஜன. 28
சம்மாந்துறையில் அண்மையில் நடைபெற்ற ஐ.தே.க. தேர்தல் கூட்டம் கல் வீச்சுக்கு இலக்காகியது. (உ-எ)

### ஈழ யுத்தம் –II ஆரம்பமான பின்

## ஐந்தில் ஒரு பகுதி படையை அரசாங்கம் இழந்தது!

தமிழீழ யுத்தம் - II ஆரம்பமாகி கடந்த 3 வருடங்களில் ஸ்ரீலங்கா படையினர் 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 8 ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர். 8 ஆயிரம் பேர் படையை விட்டுத் தப்பியோடியுள்ளனர். இது மொத்தப்படையின் ஐந்தில் ஒரு பகுதியாகும்.

சிங்கள வார இதழான 'ஹிரு' இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

1990 ஜுன் 10 ஆம் திகதி யுத்தம் ஆரம்பமான பின்னர் யுத்தத்திற்கு 90 - 91 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆயிரம் கோடிரூபாவும் 91 - 92 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆயிரத்து 500 கோடி ரூபாவும் 92-93 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆயிரத்து 800 கோடி ரூபாவுமாக மொத்தம் 4 ஆயிரத்து 300 கோடி ரூபா அரசினால் செலவிடப்பட்டிருக்கிறது என்றும் அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

## அதிமேற்றிராணியார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 28
நான் கொழும்பு திரும்பியதும் இங்குள்ள மக்களின் கஷ்டங்களை நீக்கும் வகையில் அரசுடன் தொடர்பு கொண்டு உதவுவேன் — இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணம் வந்திருக்கும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் அதிமேற்றிராணியார் அதிவண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை.

நேற்று மாலை யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மதத் தலைவர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

அங்கு அதிமேற்றிராணியார் மேலும் கூறியதாவது;-

யாழ்ப்பாண மக்கள் படும் இன்னல்களையும், அவர்களின் மனக்குறையையும் அறிவதற்காகவே நாம் இங்கு வந்தோம்.

நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர என்ன செய்யலாம் என்று அறியவும் எமது விஜயத்தை பயன்படுத்துவோம்.

தேவாலயங்கள் மற்றும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சுமூக நிலையை உருவாக்க முயற்சி செய்யுங்கள்!

### ஆண்டகையிடம் குருமார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28
உடனடியாக போரை நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பித்து சுமூகமான நிலையை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

மேற் கண்ட கோரிக்கையை யாழ்ப்பாணம் வந்த அதிமேற்றிராணியார் ஆண்டகை நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவிடம் யாழ் மாவட்ட கத்தோலிக்க குருமார் விடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். ஆயர் இல்லத்தில் நடந்த கலந்துரையாடலிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கத்தோலிக்க குருமார்கள், கன்னியஸ்திரியர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் ஆண்டகையிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ போரை உடனடியாக நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பித்து சமாதான நிலையை கொண்டுவர முயலவேண்டும்.

★ பொருளாதாரத் தடையை நீக்கவும் வான் தாக்குதல்களை நிறுத்தவும் அரசை வற்புறுத்த வேண்டும். (உ-3-9)

## 517 ஈழ அகதிகள் இன்று மன்னாருக்கு வந்து சேருவர்

யாழ்ப்பாணம், ஜன. 28
தமிழகத்தில் இருந்து 517 ஈழ அகதிகள் இன்று கப்பல் மூலம் தலைமன்னாருக்கு வந்து சேரவிருக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களை தலைமன்னார், பேசாலை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று ஆரம்பிக்கும் கப்பல் சேவை அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரை வாரத்தில் 4 தடவைகள் நடத்தப்படும் என்றும்—

இம்முறை மொத்தம் சுமார் 4 ஆயிரம் அகதிகள் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலெஸ் தெரிவித்தார். (உ-3)

## அதிமேற்றிராணியார் நேற்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணம் வந்துள்ள கத்தோலிக்க திருச்சபையின் அதிமேற்றிராணியார் அதிவண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

திருமலை மட்டுநகர் ஆயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, இலங்கை துறவற சபைத் தலைவர் அருட்திரு. அல்பிரட் அலெக்ஸாண்டர் மற்றும் யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம், மனித முன்னேற்றநடு நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன், குருமுதல்வர் அருட்திரு எஸ். ஜே இம்மானுவல் ஆகியோரும் பேச்சில் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு வே.பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை 5 மணி முதல் சுமார் 2 மணி நேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும், யாழ். மக்களின் நிலைமைகள் குறித்தும் நேற்றைய பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-5)

## யுத்த கால அமைச்சரவை; திட்டத்தை சிறிமா நிராகரிப்பு

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது யுத்த நிலைமைகளைச் சீராக்குவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு யுத்த கால அமைச்சரவை ஒன்றை அமைக்கும் திட்டத்தை எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காவின் முன்னாள் படைத்தளபதிகள் ஐந்துபேர் ஒன்றிணைந்து தயாரித்த இந்தத் திட்டத்தில் —

யுத்தகால அமைச்சரவையில் எதிர்க்கட்சித் தலைவியும் இடம்பெற்றிருக்க வேண்டும் என யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-5)

### கிரனேட்டுகளை வெடிக்க வைத்து

## காதலிகளுடன் தற்கொலை செய்யும் சிப்பாய்கள்!

இராணுவ சார்ஜன்ட் ஒருவர் தமது காதலியுடன் கிரனேட்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது. காதலியும் உயிரிழந்தார்.

மிரிகம பொலிஸ் பகுதியில் எலகலயில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இத் தற்கொலைகள் இடம்பெற்றன.

பத்துத் தினங்களுக்கு முன்பதாக அனுராதபுரம் பொலீஸ் பகுதியில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் தமது காதலியுடன் கிரனேட்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டார்.

இவர்களுக்கு கிரனேட்டுக்கள் எப்படிக் கிடைத்தன என்பது பற்றி பொலிஸார் விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது (உ-எ)

## பாதைக்கு வழி செய்த பின்பே குடாநாட்டில் வேலைத் திட்டம்

### ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ். குடாநாட்டுக்கான பாதுகாப்பானபாதை ஒன்றை திறந்த பின்னரே யாழ்ப்பாணத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

மேற் கண்ட தகவலை அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலெஸ் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எமது அமைப்பு இவ்வருடம் 10 கோடி ரூபா செலவில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இவற்றில் பெரும் பான்மையான திட்டங்கள் கிழக்கு மாகாணத்திலும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும் மேற் கொள்ளப்படவிருக்கின்றன.

வெளிநாடு ஒன்றில் இருந்து திரும்பும் அகதிகளுக்கே நாம் செயல் திட்டங்கள் மூலம் உதவ முடியும். உள்ளூர் அகதிகளுக்காக நாம் எந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே ஒரே வழி!

### யாழ் அரச அதிபர் கொழும்பில் பேட்டி

கொழும்பு, ஜன. 28
வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும், வேறு வழியில் அங்கு அமைதியை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு கொழும்பில் யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், வெரித்தாஸ் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவ வழிமுறையிலும் பார்க்க, நிலையான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் அவசியத்தை வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

வடக்கு – கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையே அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதற்குக் காரணம்

கடந்த 45 வருடங்களாக தமிழரின் பிரச்சினைகள் தீர்க்

(4ஆம் பக்கம் பார்க்க)

## "இசைப் பேரறிஞர்" விருது வயலின் கலைஞருக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 28
அகில இலங்கை கம்பன் கழகம் வருடந்தோறும் வழங்கி வரும் ''இசைப் பேரறிஞர்'' விருது இம்முறை முதுபெரும் வயலின் வித்துவான் சங்கீத பூஷணம் திரு வி. கே. குமாரசுவாமிக்கு வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளை மறுதினம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை நிகழ்ச்சியின் போது விருது வழங்கும் வைபவம் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை விருதினை வழங்கி கௌரவிப்பார்.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசையாராதனையின் காலை நிகழ்ச்சிகள் 9 மணிமுதலும்—

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 3 மணி முதலும் நடைபெறும்.

இசைப் பேரறிஞர் விருதை 1992 இல் நாதஸ்வரக் கலைஞர் கே. எம். பஞ்சாபிகேசனும், 1993 இல் சங்கீத பூஷணம் கே. ஆர். நடராஜனும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்திய உதவி பெறுவதற்கே காமினியை டி.பி. சேர்த்தார்

### ரணிலும் சிறிசேன கூரேயும் அதற்குப் பலத்த எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 28
வடக்கு பிரச்சினைக்கு இந்தியாவின் உதவியைப் பெறும் நோக்குடனேயே காமினி திஸநாயக்காவை ஐ.தே. கவில் சேர்க்க ஜனாதிபதி டி. பி விஜேதுங்க முடிவு செய்தார்.

சிங்கள வார இதழான ''ஹிரு'' இவ்வாறு [illegible] வெளியிட்டிருக்கிறது. இது தொடர்பாக அப்பத்திரிகையில் வெளியான செய்தியின் சாராம்சம் வருமாறு:-

தனது விருப்பப்படி பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி விரும்புகிறார். அதற்கு இந்தியாவின் உதவியைப் [illegible] வார். ஆனால் இந்திய உதவியைப் பெற்றுத் தரக்கூடிய —பொருத்தமான— ஒருவர் ஐ தே கவில் இல்லை. ஆகவே காமினி திஸநாயக்கா ஐ.தே. கவில் இருக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி தனது திட்டங்களை வெளிப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




உள்ளங்கள் ஒண்டான பிறகு உடல்கள் துண்டானா என்ன எண்டு நினைச்சிருப்பினம் போலை......!


### தபால்கள் இன்று விநியோகம்

'வாலுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்களைத் தரம்பிரிக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின. இன்று முதல் அவை உரியவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

பெரும்பாலான வெளியூர்த் தபால்கள் உடைக்கப்பட்டு கிழிந்த நிலையில் காணப்பட்டதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெறும்
# ★ அதிபர் மு. இராமலிங்கம் சேவை நலம் பாராட்டு மலர் ★



அதிபர்
திரு. மு. இராமலிங்கம்
B. Sc., Dip in. Ed

## ஸ்ரான்லி கல்லூரியை மீண்டும் உயர் நிலைக்கு உயர்த்திய அதிபர்

65 ஆவது அகவையைக் காணும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்பது ஆண்டு காலமாக அதிபராக சேவையாற்றி, இன்றுடன் ஓய்வு பெற்றுக்கொள்ளும் மணிவிழா நாயகனும் கல்லூரி அதிபர் அவர்களுக்கு வாழ்த்து கூறுவதில் வணிகமன்றம் பெருமை அடைகின்றது.

1945ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்லூரியில் புலமைப் பரிசில் பெற்ற மாணவனாகத் திகழ்ந்த இவர், கல்லூரி அதிபர்கள் வரிசையில் முதலாவது பழையமாணவன் என்ற சாதனையை நிலைநாட்டிக் கொண்டவர்.

எமது வணிகமன்றம் இற்றைவரை 16 மலர்களை வெளியிட்டு உள்ளது. இவற்றில் அரைப்பங்கிற்கு மேலான மலர் வெளியீட்டிற்கு மன்றக் காப்பாளராக இருந்து இந்நிகழ்வுகளை வழிநடத்திய பெருமை இவருக்கு உரியது.

நாற்பது, ஐம்பது காலப் பகுதிகளில் தேசிய கல்லூரியாகத் திகழ்ந்த எமது கல்லூரியின் நிலை சரிந்து கொண்டிருந்தபோது, அதிபராகப் பொறுப்பேற்று மீண்டும் கல்லூரியை அதற்கு ஒப்பான ஒரு நிலைக்கு உயர்த்தி வைத்தவர் எமது அதிபர் என்றால் அது மிகையாகாது.

தனது வாழ்க்கையில் பெற்ற கல்வியாலும், அனுபவத்தாலும், நட்பாலும் ஏற்பட்ட நல்ல பண்புகளாலும் கல்விச் சமுதாயத்திற்கு நற்றொண்டாற்றிய அதிபரின் ஓய்வுகாலம் சிறப்பானதாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

வணிகமன்றம்
1993 - 1994

★

## விழா நாயகருக்கு ஆசியும் பாராட்டும்

ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. மு இராமலிங்கம் அவர்களின் மணிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதியுமான கலாநிதி சு. மோகனதாஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

காலை 8-30 மணிக்கு மணிவிழா நாயகர் இல்லத்திலிருந்து அழைத்து வரப்படுவார்.

மங்கள இசை, தேவாரம், மௌன அஞ்சலி, வரவேற்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து மணிவிழா நாயகரைப் பாராட்டி ஆசியுரையும் நயப்புரைகளும் நிகழ்த்தப் படும்.

சிறப்பு மலர் வெளியீடும் நிறுவுநர் நினைவுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

★



## உயர்ந்த குணக்குன்று

பல்வளம் கொழிக்கும் யாழ்நகர் அதனிலே
நல்புகழ் கொண்டெம் கீழ்த்திசை இலங்கும்
மாகலைக்கூடம் கனகரத்தினம் எம். எம். வி
யாசிலீர் ஐந்தாண்டில் பெற்றதோர்பேறு
பல்கலை தந்து மாணவரிங்கு நலம்பெற
சொல்புகழ் சேர்த்து தூயநல் வாழ்வளித்து
எண்திசை யாங்கணும் இசைமிக எழுப்பிய
ஏந்தல் எம்அதிபர் அகவை அறுபதில் ஓய்வு பெறுகின்றார்
கல்வியொடு ஒழுங்கு கண்ணியம் என்று
நிலைகொள் பயிற்சிகள் அனைத்தும் ஈந்து
இதம்பெறு தகுதிகள் முழுதும் தந்தனை
விதம் விதமாகப் பாங்குறு விழாக்கள்
நிதம் நிதம் வாழ்க்கையில் நிறுவிடும் முயற்சிகள்
சுத்த நற்பிரசைகளாகு திறன் நயந்த
உத்தம அதிபர் உயர்ந்த குணக்குன்று
பக்தியொடு பூசிக்கும் பெருநிதியம் நீடுவாழி!
விளையாடு திடல்தனில் பரிசில் பல சுமந்தே
நாடகமும் கவின்கலையும் மேடையினில் படைத்தே
கைவினையும் மெய்நெறியும் களிகொண்டிலங்க
கற்றோரும் மற்றோரும் போற்றுகின்ற பூங்கா
காதை நம்மனோரும் கேட்டு மகிழ்வுற்றே
போற்றுகின்ற தலைவர் ஓங்குபுகழ் அதிபர்
ஓய்வின்றி உழைத்து இளைப்பாறும் இவ்வேளை
நாளெல்லாம் மாணவர் நாம் வாழ்கவென-
வாழ்த்துகின்றோம்.

— மாணவ முதல்வர் மன்றம், 1993-94 —
ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம்.

## நெறிப்பட வாழ வைத்த அதிபர்

யாழ்பாடி யாழ்மீட்டி
வாழ்(த்து) பாடி பரிசுபெற்ற
வன்மை மிகு யாழ் நகரின்
மத்தியிலே மங்களமாய் விளங்கும்
சித்திதரும் கல்விக்கொரு கூடமாக
மிளிர்கின்ற ''ஸ்ரான்லி'' கலாசாலை தனிலே
ஒளிர்கின்ற பெருமை மிகு அதிபராக
வித்தகனாம் கல்வி பெற்று நாமெல்லாம் மேன்மையுற
சித்தமுடன் ஒன்பதாண்டு சேவைசெய்தலைவ வாழ்க!
உடலதால் மெல்லியராகி உள்ளத்தால் வலியராகி
திடமுடை நடையராகி தெளிந்த பேரறிஞராகி
தடம்புரள் துயர்வந்தாலும் தாங்கியெம்மை
இடரிலாக் கல்வி தந்த ஏந்தலே வாழி! வாழி!
தரத்திலுயர் கல்வி மன்றத்தை தாமமைத்து
விருத்தியுறவே வளர்த்து மேவு புகழ் கொண்டதுடன்
கருத்திலுயர் பொது நிகழ்வில் கலந்து கொள்ளும்
பரத்திலுயர் புகழ்பெறும் எம் அதிபர் வாழ்க!
பாசத்தினால் எமைப் பிணைத்து கண்டிப்பாய் வளர்த்தெடுத்து
நேசத்தினால் அரவணைத்து நீள்புகழ் கல்வி தந்து
தேசத்தார் எமை மதிக்க வைத்துவிட்ட அதிபர் வாழி!
கோரிய உதவியெல்லாம் குறைவற முடித்துத் தந்து
பாரிய இடர்களெல்லாம் பகலவன் ஒளிமுன் பனிபோல் தீய்த்து
நேரிய வழியிலெமை நெறிப்பட ஒழுக வைத்து
சிரிய கல்வி தந்த அதிபரை வாழ்த்துகின்றோம்.

- இன்ரறக்ட் கழகம்.
1993 - 1994

## நலமோடு வாழ்க!

பேரோடு பெரும்புகழை
பெற்ற எம் அதிபர்
யாரோடும் பகைத்ததில்லை
யாம் உயர பள்ளிக்காய் உழைத்தார்.

சொற்படியே செயலாற்றி
சுழன்று உழைத்திட்டார்
எப்படி இருந்த பள்ளி
ஏற்றமுற வைத்தார்.

இராமனென்னும் நாயகனை
இலக்கியத்தில் கற்றோம்
இராமலிங்கர் இவர்திறனை
இங்கிவரில் பெற்றோம்.

கடமையின் முன் கண்ணுறங்கார்
கல்லூரிக்காய் வாழ்ந்தார்
திறமையுடன் ஸ்ரான்லியினை
திகழ்ந்திடவே வைத்தார்.

விஞ்ஞான மாணவர் நாம்
விளம்ப இவர் பெருமை
சொல்ஞானம் இல்லையாம்
சொல்லுகிறோம் நன்றி.

நல்ல மனச் செம்மலிவர்
நலமோடு வாழ்க
பல்லாண்டு பல்லாண்டு
பயனீந்து வாழ்க!

விஞ்ஞான மன்றம்
1993 - 1994

## நம் அதிபர் வாழி!

இப்புவிதனில் எப்பரிசும் வேண்டாது
எப்போதும் கல்வி வளர்ச்சியே கண்ணாய்க்கொண்டு
இப்போது தன்சேவை தனில்நின்று ஓய்வுபெறும்
ஒப்பரும் அதிபரை நலம்வாழ வாழ்த்துகின்றோம்.

மெல்லிய தோற்றமும் மிடுக்குடை நடையும்
துல்லியமாய் எதையும் துய்த்துணரும் அறிவும்
வல்லவராய் பூமியிலே நாமுயர்ந்து வாழ
நல்லவராய் வந்து சேவை தந்த நம் அதிபர்

சட்டத்துடன் பேசி அன்போடு வழிநடத்தி
திட்டமிட்டே எங்கள் கல்லூரி தானுயர
பட்டப்படிப்பும் தான் படித்து வந்தவரை
இட்டமுடன் சேவைநலம் பாராட்டி நிற்கின்றோம்

சீர்பெறு உயர்கல்வி மாணவர் மன்றத்தை
பேர்பெறவே வளர ஊக்கமொடு ஆக்கம் தந்து
ஆர்வமுடன் பொதுவாழ்வு நிகழ்வுகளில் பங்குகொள்ளும்
நேர்மையுயர் உள்ளம் கொண்டவரை வாழ்த்துகின்றோம்

— உயர்தர மாணவர் மன்றம் 1993 - 1994 —

(விளம்பர இல. 29120)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வாடகைக்கு விடப்படும் தகரப் பந்தல், கதிரைகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: இலங்கேஸ்வரன், மயிலணி வடக்கு, சுன்னாகம். (29108)

### தேவை

மெடிகல் Labக்கு நல்ல நிலையில் உள்ள Microscope, Hand Centrifuge தேவை. Make, எதிர் பார்க்கும் விலை, முதலியவற்றுடன் எழுதவும். 925, C/o உதயன், யாழ்ப்பாணம். (6923)

வைத்தியசாலைக்கு பெண் தாதிமார் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம் 926, C/o உதயன், யாழ்ப்பாணம். (6924)

### மண பெண் தேவை

கொழும்பில் பணிபுரியும் நல்லொழுக்கமுள்ள 31 வயது MBBS டாக்டருக்கு, ஒழுக்கமும் பண்பும் நிறைந்த அழகுடைய செவ்வாய் குற்றமில்லாத இந்து மணப்பெண் தேவை டாக்டர், தொழில் சார் பணிபுரிவோர் (Professionals), பட்டதாரிகள் விரும்பத்தக்கது சாதகம் உட்பட குடும்பப் பின்னணிகளுடன் தொடர்பு கொள்ளவும் விவரங்கள் மிக இரகசியமாக வைக்கப்படும். இல: 507 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29140)

### புலமைப்பரிசில வகுப்புகள்

தைப்பூசத்தை முன்னிட்டு ஆண்டுகள் 4, 5க்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன ஆரம்பம்: 29-01-1994 பிற்பகல் 3 மணி. உதயன் அக்கடமி, யாழ். மாநகரசபை முன்பாக, நல்லூர். (29129)

### காவேரி

என் தலையில் பேனாம் பேன் இருந்தால் ஃபிரெண்ட்ஸ் இல்லை. காவேரியால் பேன் இல்லை. நாடுங்கள்: காவேரி சீயாக்காய்ப் பவுடர் (29084)

### மணிக்கூடுகள திருத்தல்

சகல மணிக்கூடுகள் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும், சகல மணிக்கூட்டு பற்றரிகளும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், 12 ஸரேசன் வீதி, (சந்திக்கு அருகாமையில்) சுன்னாகம். (6921)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்களேன்! தினமும் முற்பகல் 8-30 — 12-30 பிற்பகல் 3-00—6-00 த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (29096)


## நன்றி

கடந்த 22ஆம் திகதி எம்மால் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பரிசுப் பொருட்கள், அன்பளிப்பாக தைக்கப்பட்ட ஆடைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் மதிய போசனம் வழங்கப்பட்டன. இந் நிகழ்வுக்கு பொருளாகவும், நிதியாகவும் தந்துதவிய யாழ் நகர வர்த்தகர்களுக்கும், ஒத்துழைப்பும் அனுமதியும் வழங்கிய இந்து சமய பேரவைக்கும், மைதானத்தையும், மண்டபத்தையும் தந்துவிய நவீலட் பாடசாலை அதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

—யாழ் வட்டலியோ கழகம்

(சி 7282)


## ஜீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி

A/L 94 மீட்டல் வகுப்பு

✲ பௌதிகவியல் ✲
S. வரதராஜன்

சனி, ஞாயிறு 11 00 — 12-00
செவ். வியாழன் 5 00 — 6 00

DAY CLASS

திங், செவ், வியா. 8-00 — 10-00

★ 10 - 02 - 1994 லிருந்து மாதாந்தப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன
★ 05 - 02 - 1994 ற்குப் பின்பு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது

[சி-7205]


## "சித்தமருத்துவம் 1992-93" சஞ்சிகை வெளியீடு

காலம்: 30-01-1994 ஞாயிறு மு ப 9 மணி.
இடம்: சித்தமருத்துவத்துறை, கைதடி

வெளியிடுபவர்:
பதில்துணைவேந்தரும், மருத்துவபீடாதிபதியுமான
பேராசிரியர் K பாலசுப்பிரமணியம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சித்தமருத்துவ மாணவர் மன்றம்,
யாழ் பல்கலைக்கழகம்.

[29130]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22 | 07 |
| 04 | 02 |
| 1939 | 1993 |

அமரர்
### சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம்

திதி: 28 - 01 - 1994

எம்மை ஆறாத்துயரில் விட்டு
மீளாத்துயில் கொண்ட
இல்லத்தின் சுடரொளியே, பாசதீபமே!
தெய்வத்தின் இருப்பிடமே
ஆண்டொன்று சென்றாலும் — எம்
நினைவலைகள் என்றும் ஓய்வதில்லை.

என்றும் உங்கள் பாச நினைவுகளுடன்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(6785)


## A/L DAY CLASS

கணித, உயிரியற் பிரிவு

ஆரம்பம்: 31 - 01 - 1994
காலை 8-30 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல் | — திரு றெஜினால்ட் |
| இரசாயனவியல் | — திரு செலவா |
| தாவரவியல் | — திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல் | — செல்வி ஞானகலா |
| தூய, பிரயோக கணிதம் | — திரு. பத்மராஜ் |

★ வாரத்தில் நான்கு நாட்கள்
★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்
★ இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.

NATURE
INSTITUTE OF SCIENTIFIC STUDIES
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.
(வானவில் மேல்மாடியில்)

[சி/7145]


## நன்றி நவிலல்

### அமரர் ச சொக்கலிங்கம்
(ஏழாலை மேற்கு)

அமரர் ச. சொக்கலிங்கம், (ஏழாலை மேற்கு) அவர்களின் இறுதி நாட்களில் அரும் சேவை செய்த யாழ் போதனா வைத்தியசாலை 7ஆம் வார்ட் வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், தாதிமார்கள், நலன்புரிச் சங்கத்தினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் இறுதிக் கிரியையின்போது நேரில் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்திய, இரங்கல் செய்திகள் வெளியிட்ட யாழ். இந்துக்கல்லூரி, யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், மல்லாகம் மகா வித்தியாலயம், ஏழாலை மகாவித்தியாலயம், கோட்டைக்காடு அ. த. க. பாடசாலை, ஏழாலை சைவ மஹாஜனா ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய சக உத்தியோகத்தர்கள், தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் ஆகியோருக்கும் மீளாத்துயரில் ஆறுதல் கூறிய, அனுதாபச் செய்திகள் அனுப்பிய, எல்லா வழிகளிலும் உதவிகள் புரிந்த நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாததையிட்டு மனம் வருந்துகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(29124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## போன மச்சான் திரும்பி வந்தார்!

முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டார். கடந்த எட்டு மாதங்களுக்கு முன் வரே எதிர்பார்க்கப்பட்டு பல இழுபறிகள், குத்துவெட்டுகள், குத்துக்கரணங்களின் பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை 'மீண்டும் சேர்தல்' அரங்கேறியுள்ளது; ஒப்பேறியுள்ளது.

திரு காமினி திசநாயக்கா பச்சை ஐ. தே. கட்சிக்காரர்! ஜே. ஆர். காலத்து ஆட்சியில் அவரது செல்லப்பிள்ளையாகவும், அவரது வலது கையாகவும் வர்ணிக்கப்பட்டவர். ஜே. ஆருக்கு அடுத்து அவரது அரசியல்வாரிசாகவும், ஜனாதிபதியாகவும் காமினியே வருவார் என்று கூறப்பட்டது.

ஆனால் 1988, 1989ஆம் ஆண்டுகளில் தெற்கில் இடம்பெற்ற ஜே. வி. பி. வன்செயல்களையும், பிரேமதாசாவைப் புறக்கணித்து காமினியை ஜனாதிபதி பதவிக்கு நிறுத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்தையும் கருதி காமினி பின்தள்ளப்பட்டார்.

பிரேமதாசாவுக்கு கீழ் அடங்கி இருந்தால் தமக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்று உணர்ந்த லலித்துடன் காமினியும் சேர்ந்து, குற்ற விசாரணைப் பிரேரணையை சமர்ப்பித்தனர்.

அப்பிரேரணை தோல்வி கண்ட கையோடு லலித்தும், காமினியும் சேர்ந்து புதிய கட்சி ஒன்றை உருவாக்கினர். எனினும் லலித்தின் மரணத்துடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கதை வேறாகிவிட்டது. பிரேமதாசா மாண்டதுடன் ஐ. ஐ. தே. முன்னணி தேவைதானா என்ற கேள்வியும் எழுந்தது.

அதனைத் தொடர்ந்தே கடந்த ஜூன் மாதத்தில் காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேருவார் என்ற பேச்சுக்கள் எழுந்தன. அதற்கான முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் என்பனவும் இடம்பெற்றன. காமினி மீண்டும் ஐ. தே. கட்சிக்குள் வந்தால் தமது அரசியல் எதிர்காலம் மங்கிப்போய் விடலாம் என நினைத்து, பிரதமர் ரணில் அதற்கேற்றவாறு செயற்பட்டுக் காய்களை நகர்த்தினார்.

ஐ. தே. கட்சியில் சேரும் முயற்சி தோல்வி அடையவே, காமினி தனது முக்கியத்துவத்தை உணர்த்தும் உத்தியாக மாகாண சபை மட்டத்தில் சில அரசியல் நாடகங்களை நடத்தினார். எனினும் விஜேதுங்கா தனக்குப் பலம் சேர்ப்பதற்காக காமினியை உள்ளே இழுத்து எடுத்துள்ளார்.

அனுரா, ரொனி, காமினி என்று எல்லோரையும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டால் தேர்தலில் தாமும், ஐ. தே. கட்சியும் வெற்றி பெறலாம் என்ற கணக்குப் போட்டுத் தான் ஜனாதிபதி அரசியல் களம் ஆடுகிறார்.

போன மச்சான் திரும்பி வந்தார் என்பது போல, காமினி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் வந்துவிட்டாலும், அதனோடு நாடகம் முடிந்ததாக இல்லை. ஆளும் கட்சிக்குள் நிச்சயம் உட்பூசல்கள் வெடிக்கும். தேர்தல்கள் நெருங்குவதற்கு முன்னர் அரசியல் அணி சேரல்கள், உள்ளுக்குள்ளேயே நடக்கும். குத்துவெட்டுகள், குழிபறிப்புகள், சூழ்ச்சிகள் மலிந்து அக்கட்சிக்குள்ளேயே அரசியல் களேபரங்கள் நிச்சயம் நடக்கும்!

எதுவானாலும்—

காமினியின் மீள்வருகை தமிழர் பிரச்சினை சம்பந்தமாக புதிய நிலைஒன்றைத்தோற்றுவிக்குமா என்பதே தமிழர்களுடைய அக்கறை. கொழும்பில் பேசப்படுவது போல அவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரானால், இப்போதுள்ளதைவிட இந்தியா கொழும்புடன் மிக நெருக்கமாக வரும். அப்போது இரண்டு சாராரும் கூட்டாக தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட முயற்சிப்பர். அதில் சந்தேகமில்லை.

## இன்று

''மலேரியாநோயும் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளும்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

(க-17)

★ ★ ★

ப.நோ.கூ. சங்கத்தலைவர், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் திரு.வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி மாணவர்களின் மெல்லிசை இடம்பெறும். மேற்படி கல்லூரி அதிபர் திரு ந. அனந்தராஜ் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

★ ★ ★

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கு ஊடாக வழங்கும் வங்கிக் கடன் திட்டம் சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெறும்.

(க-17-30)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறையின் சமூக விஞ்ஞான மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''இலங்கையின் பொது நிர்வாக அமைப்பில் பிரதேச செயலகங்களின் எதிர்பார்ப்பும் செயற்பாடும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு பல்கலைக் கழக கைலசபாதி கலையரங்கில் நடைபெறும்.

உதவிப் பிரதேச செயலர் திரு. எஸ். இரேனியஸ் (அம்பகமுவ மத்திய மாகாண சபை) இவ்விடயம் பற்றி உரையாற்றுவார். (க)

★ ★ ★

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் நடத்தும் ''முடிவில் ஓர் ஆரம்பம்'' என்ற நாடகம் இன்றும் நாளையும் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் பிரதான வீதி கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெறும்.

மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளார் பண்பாடு பற்றிய உரையை நிகழ்த்துவார்.

தொடர்ந்து மாலை 6 - 45 மணிக்கு மாதாந்த கலை நிலா அரங்க நிகழ்ச்சி நடைபெறும். மாதாந்தப் பாடல் இசைக்கச்சேரி, ''கி.பி 2000'' நாடகம் ஆகியன இடம்.

[த-51]

★ ★ ★

கோழிகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த கருத்தரங்கு ஒன்று, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

## ஐவர் காயம்

யாழ். நகரில் இருந்து பயணிகளை ஏற்றிச்சென்ற தட்டி வான் ஒன்று நேற்றுக் முன்தினம் கொடிகாமம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்தனர்.

கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடையே— கண்டி வீதியில் — வீதியோரம் நின்ற பனைமரம் ஒன்றுடன் அந்த வான் மோதி விபத்துக்குள்ளானது.

பளை, தர்மக்கேணியைச் சேர்ந்த செல்லத்துரை சாந்த நாயகி (வயது 25), எழுதுமட்டுவாளைச் சேர்ந்த நல்லதம்பி இராசமணி (வயது 50), சின்லாலையைச் சேர்ந்த எஸ். நற்குணம் (வயது 40), பளை வேம்போடுகேணியைச் சேர்ந்த திருமதி நகுலேஸ்வரன் (வயது 33), விபத்துக்குள்ளான வானின் கிளினர் ஆகியோரே அந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(த-5-15-31)

கிழக்கில் தேர்தல் நெருங்க

# வடக்கில் விமானத் தாக்குதல் அதிகரிக்கும் சாத்தியக்கூறு!

### கொழும்பு தமிழ்ப் பத்திரிகை தகவல்

கொழும்பு ஜன. 28

கிழக்கில் தேர்தல் நடக்கும் நாட்கள் நெருங்க நெருங்க வடக்கில் விமானத் தாக்குதல் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா பகுதிகளில் ஊடுருவுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஓரங்கமாக வடக்கில் புலிகள் நிலைகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்தி கவனத்தை வேறு திசையில் திருப்பும் நடவடிக்கைகளில் விமானப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (த-3)

## பூநகரித் தாக்குதல் விசாரணை;

# 18 ராணுவ அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை இல்லை!

கொழும்பு, ஜன. 28

பூநகரித் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய குழுவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 18 உயர் இராணுவ அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எதையும் புதிய இராணுவ தளபதி ஜெரிசில்வா மேற்கொள்ள மாட்டார்.

இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் இவ்வாறு கருத்துத் தெரிவித்ததாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த வார இதழில் வெளியாகியுள்ள ஆய்வுக் கட்டுரை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூநகரித் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய குழுவின் அறிக்கை முன்னாள்இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி அந்த அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு அனுப்பியிருந்தார்.

அந்த அறிக்கை மேல் நடவடிக்கைக்காக தற்போது இராணுவத் தளபதி ஜெரி சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றத்துக்கு உரிய அதிகாரங்கள் எதுவும் இந்த விசாரணைக் குழுக்கு இல்லையென்பதாலும்—

நிர்வாகத் திறமையற்ற முன்னாள் தளபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை தற்போதைய தளபதி ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதாலும்—

குற்றஞ் சாட்டப்பட்ட 18 உயர் அதிகாரிகளும் நீண்ட கால சேவையில் இருப்பதால், அவர்களை தண்டிக்கும் பட்சத்தில் அவர்கள் பதவி விலகினால் இன்றைய நிலையில் இராணுவத்தினருக்கு அது பெரும் இழப்பாக அமைந்துவிடும் என்பதாலும்— சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது புதிய தளபதி ஜெரி சில்வா கடும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள மாட்டார் என்று, இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்— இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'விடிவின் ராகங்கள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

தமிழீழ இசைக்குழு உருவாக்கிய ''விடிவின் ராகங்கள்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை மாலை 3 30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி கரிகாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துவார்; மூத்த தளபதி திரு பானு ஒலிநாடாவை வெளியிடுவார். யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நாடாவைப் பெற்றுக் கொள்வார். யாழ் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு செல்வராசா கலைஞர்களைக் கௌரவிப்பார் கவிஞர் இ. முருகையன், திருமதி க. சிதம்பரநாதன், பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை ஆற்றுவார்கள்.

பதிலுரையை இந்த ஒலிப்பதிவு நாடாவின் இசையமைப்பாளர் மார்ஷல் நிகழ்த்துவார். விழாவின் இறுதியில் சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழ இசைக்குழுவின் ''இசைத் தென்றல்'' இசை நிகழ்ச்சி இடம்பெறும். (க-111)

## ரவையை அடித்தவர் காயம்!

தேடுவாரற்றுக் கிடந்த துப்பாக்கி ரவையை எடுத்து சுத்தியலால் அடித்துப் பார்த்த இளைஞர் ஒருவர் அது வெடித்ததால் காயமடைந்தார்.

மிருசுவில் உசன் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கந்தையா வசந்தன் (வயது 17) என்றஇளைஞனே காயமடைந்தவராவார். (த-15)

## ரொஹான் தளுவத்தைக்கு இராணுவத்தில் புதிய பதவி

### வடபிராந்திய தளபதி செனவிரத்னா

வட பிராந்தியத் தளபதியான மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தை இராணுவத் தலைமையகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள செயற்பாட்டு- படையணி நகர்த்தல், விநியோக மதிப்பீட்டுக்குப் பொறுப்பான (Logistics) இயக்குநர் நாயகம் பதவியை அடுத்த வாரம் ஏற்கவிருக்கிறார்.

இவர் இலங்கை இராணுவத்தின் மூன்றாவது டிவிஷன் படையின் கட்டளைத் தளபதியாக தற்போது இருந்து வருகிறார்.

மூன்றாவது டிவிஷன் படைதான் வடபிராந்தியத்தில் உள்ளது.

அண்மையில் பதவி உயர்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஏ. எம்.யூ செனவிரத்னா, இப்படையின் புதிய கட்டளையிடும் தளபதியாக பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தலைமைப் பீடத்தில் உள்ள மூன்றாவது சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தை ஆவார்.

பூநகரி தோல்விக்கு மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தையே பொறுப்பு என இது குறித்து விசாரணை நடத்திய குழு தனது அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தது தெரிந்ததே. [இ-எ]

## நாளை

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் மாதாந்தம் நடத்தப்படும் யோகாசன கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

இறைமக்கள் பயிற்சி நிலையம் ஒழுங்கு செய்த ''போர்க்கால தீர்க்கர்கள்'' என்ற கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 8-30 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை சுண்டிக்குளி பரியோவான் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

(க-17)

★ ★ ★

''கவிஞன்'' கையெழுத்து சஞ்சிகையின் பொன்விழாவினையொட்டி நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் கையெழுத்து சஞ்சிகை கண்காட்சியும் நாடகவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

தெல்லிப்பழை, சங்கானை கோட்ட பாடசாலை ஆங்கில ஆசிரியர்களுக்கான (ஆண்டு 7—11) சேவைக்கால பயிற்சியும் செயலமர்வும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறும்.

(த-152)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நாளை 29 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு யாழ். கிளை முன்னைய தலைவர்கள், போஷகர் ஆகியோரின் உருவப்படத் திரைநீக்கமும் 1993 டிசம்பர் மாத சஞ்சிகை வெளியீடும் நடைபெறவுள்ளன. (க)

## ''நொமியன மினிசு'' வெளியீடு ஆட்சேபித்து மறியல் போர்

கொழும்பு, ஜன 28

உபசபாநாயகர் காமினி பொன்சேகாவினால் தயாரிக்கப்பட்ட ''நொமியன மினிசு'' (சாகாத மனிதர்கள்) என்ற சிங்களத் திரைப்படத்தை திரையிட தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு. ரீரோன் பெர்னாண்டோ அனுமதி வழங்கியிருப்பதை ஆட்சேபித்து, திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் முன்னால் சிங்களத் திரைப்படக் கலைஞர்கள் நேற்று முன்தினம் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வெளியிடுவதற்கான அனுமதியை எதிர்பார்த்து ஏற்கனவே பல திரைப்படங்கள் தேங்கிக் கிடக்கும் நிலையில் — அவற்றின் பின்னர் தயாரிக்கப்பட்ட அந்தத் திரைப்படத்துக்கு மட்டும் சாதாரண நடைமுறைக்கு முரணான வகையில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

(த-5-6)

## பிரேமாவை கொன்றது ''நைட்ரோ'' ரக வெடிமருந்து

### நீதிமன்றுக்கு அறிக்கை

கொழும்பு, ஜன 28

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்வதற்கு ''நைட்ரோ கூட்டு'' ரகத்தைச் சேர்ந்த மிகச்சக்தி வாய்ந்த வெடிப் பொருளே பயன்படுத்தப்பட்டதாக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ரசாயன பகுப்பாய்வாளர் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்.

## தமிழக ஆளுநருக்கு விருந்து; அ.தி.மு.க.வினர் புறக்கணிப்பு!

இந்தியக் குடியரசு தினத்தை ஒட்டி தமிழக மாநில ஆளுநர் சென்னாரெட்டி நேற்று முன்தினம் மாலை ராஜ்பவனில் அளித்த விருந்துபசாரத்தை முதலமைச்சர் ஜெயலலிதாவும் மாநில அமைச்சர்களும் ஆளும் [illegible] எம். எல். ஏக்களும் பகிஷ்கரித்தனர்.

தமிழக வரலாற்றில் ஆளுநரின் குடியரசுதின விருந்துபசாரத்தை மாநில அரசு [illegible] இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. [illegible]

## இந்தியா முன்னணியில்

பெங்களூர், ஜன. 28

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பெங்களூரில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸை 6 விக்கெட்டுக்களை இழந்து 541 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நிறுத்திக் கொண்டது.

நவ்ஜோத்சிங் சித்து 99, வினோத் காம்ப்ளி 83, சச்சின் டெண்டுல்கர் 96, அஸாருதீன் 108, மஞ்ச்ரேக்கர் 99 ஓட்டங்களை பெற்றனர். முத்தையா முரளிதரன் 150 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நேற்று ஆட்ட நேர முடிவில் இலங்கை 2 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

(உ-6)

பாதைக்கு
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தையும் செயற்படுத்த முடியாது.

தமிழகத்தில் இருந்து திரும்பும் அகதிளை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற தக்க வகையில் பாதுகாப்பான பாதை ஒன்று தேவை அப்பாதை திறக்கப்பட்ட பின்னரே எமது செயல் திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்த முடியும்.

தமிழக அகதிகளை கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வருவது தொடர்பாக அரசுடன் பேசி வருகிறோம் அதற்கான சாத்திய நிலை உருவானால் எமது செயல் திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்த வாய்ப்பு கிடைக்கும் என்றார்.

(உ-3)

இந்திய உதவி..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தல் முடிவைப் பொறுத்து காமினியைப் பிரதமராக்குவதற்கும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் இம்முடிவை ஆட்சேபித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரும் கட்சிச் செயலாளருமான சிறிசேன கூரே ஆகியோர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். அதன் முதற் கட்டமாக முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து இது குறித்து அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தமது நெருங்கிய சகாக்களுடன் அவர்கள் இரகசிய ஆலோசனை நடத்தி வருகிறார்கள்—இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (உ-9)

பேச்சுக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைவர் திரு. வே. பிரபாகரனை பிரதமர் கேட்டிருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தனது தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் அரசமைப்பு சீர்திருத்தக் குழுவுக்கு தங்களது யோசனைகள் மற்றும் கோரிக்கைகளை அனுப்பி வைக்குமாறு விடுதலைப் புலிகளிடம் ஏற்கனவே பிரதமர் கேட்டிருப்பதும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால்—

பேச்சுவார்த்தை எதுவும் நடப்பதற்கு முன்னர் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறி வருவதை அரசாங்கம் ஏற்கும் வரை விடுதலைப் புலிகள் பிரதமரின் வார்த்தைகளை நம்பிக்கையின்மையுடன் தான் நோக்குவார்கள் என்று பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார். (உ-எ-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3 மணிக்கு நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் வல்வை வி. க. அணியை எதிர்த்து விநாயகர் வி. க. அணி மோதும். (உ)

★ ★ ★

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் றோட்டறக் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிமுதல் 5 30 மணி வரை சுண்டுக்குளி வை. எம். சி. ஏ. அரங்கில் மேசைப் பந்தாட்டப் போட்டிகள் இடம்பெறும். (உ)

## மார்ச்சில் தேர்தல்

கொழும்பு, ஜன. 27

தென் மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளது. தேர்தல் நடக்கும் திகதி அடுத்த நான்கு தினங்களுக்குள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார். (உ-எ)

யாழ். மக்கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் இருப்பிடங்கள் தாக்கப்பட்டமை குறித்து அறியவும்—

இதனால் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை அவர்களுடன் பங்கேற்கவுமே நாம் இங்கு வந்தோம்.

இரு வருடங்களுக்கு முன்னர் நான் இங்கு வந்தபோது இருந்த நிலைமையிலும் பார்க்க இப்போது அனர்த்தங்கள் அதிகரித்திருப்பதை இங்கு வந்த பின் நாம் அறிய முடிந்தது.

இங்குள்ள நிலைமை குறித்து யாழ். ஆயர் எனக்கு விவரங்களை அனுப்பியிருந்தார்.

இங்குள்ள மக்களின் நிலைமையைப் பார்க்கும் போது சமாதானத்தைக் கொண்டு வர நாம் முயற்சி எடுக்க வேண்டியுள்ளதை உணர முடிகிறது என்றார்.

நேற்றுக் காலை யாழ் ஆசனக் கோயிலில் நடந்த திருப்பலிப் பூசையில் ஆண்டகை கலந்து கொண்டார்.

அமைதி ஏற்பட வேண்டும் என்று இத் திருப்பலிப் பூசையில் பிரார்த்திக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை நேற்று சந்தித்துப் பேசிய ஆண்டகை புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை தாம் சந்திக்க விரும்புவதாக அவர்களிடம் கூறினார் என அறிய வந்தது.

(உ-3-5-9)

## மரத்தை மனிதன் வாழவிட்டால் மரம் மனிதனை வாழ வைக்கும்

''உண்மையே உயர் அறம்''

சேவைப் பிணைப்பின் நினைவுகள்

### அமரர் இராமநாதன் இலையதம்பி

சுன்னாகம்

(இளைப்பாறிய முகாமையாளர், மரக்கூட்டுத் தாபனம்)

மக்கள் சேவைக்கு: – 03 – 1931

சேவைக்கு ஓய்வு: 28 – 12 – 1993

நூற்றாண்டு விழா எழுச்சி நாளைக் கொண்டாடி வரும் யாழ்/ சுன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்த செம்மலே! 1986 இல் பழைய மாணவர் சங்கப் புனரமைப்பின் போது வாழ்நாள் உறுப்பினராகி அரிய பல சேவைகளும் தொண்டுகளும் செய்தீர்கள் அண்ணா!

உங்கள் மறைவால் துயர் தோய்ந்து வாடி நிற்கின்றோம்!

தங்கள் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களையும், உங்கள் சேவைகளையும் வாழ்த்துகிறோம்! பாராட்டுகின்றோம்! போற்றுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்/ சுன. ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம். (சி/7137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதசுரபி கலாமன்றம்

நடத்தும்

# தமிழியல் விழா

''கொஞ்சும் தமிழ் பேசி
மிஞ்சும் கலை வளர்ப்போம்''

இடம்: யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

காலம்: **28-01-1994** பிற்பகல் 5மணி

1. மங்கள விளக்கேற்றல்:
   திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை (கோத்தணி அதிபர், புத்தூர்)
   திரு. இ. செல்லத்துரை (ஓய்வுபெற்ற நில அளவையாளர்)
2. மௌன அஞ்சலி
3. தலைமையுரை:
   திரு சி. சிவநேசன் (மன்றக் காப்பாளர்)
4. வரவேற்புரை:
   திரு. இ. நித்தியானந்தன் (மன்ற உப செயலாளர்)
5. சிறப்பு விருந்தினர்கள்:
   திரு எஸ். சிவானந்தமூர்த்தி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)
   திரு சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கோட்டம்)
   திரு. ப. புஷ்பரட்ணம் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)
   திரு. த. பரராஜசிங்கம் (சமாதான நீதிவான், நீர்வேலி)
   திரு. அ. அமுதன் (புத்தூர் பிரதேசப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள்)
6. பிரதம விருந்தினர்:
   திரு. எஸ். சிவலிங்கராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)
7. அமைப்பாளர் உரை:
   திரு. தி. வேல்நம்பி
8. நன்றியுரை:
   திரு. சி. திரிகரன் (மன்ற உறுப்பினர்)
9. சொல்லிசை:
   திரு. க. அன்னதாசன்
10. நாடகம்:
    **"வெளிநாட்டுக் கல்யாணம்"**
11. வில்லிசை:
    "மனிதன் இராமன்"
12. வழக்காடு மன்றம்:
    "குற்றவாளிக் கூண்டில் கோவலன்"

| தொடுப்போர்: | மறுப்போர்: |
|---|---|
| தி. வேல்நம்பி | இ. யோகநாதன் |
| இ. நித்தியானந்தன் | த. தர்மகுலசிங்கம் |

நீதிபதி: பண்டிதர் தெ. குணபாலசிங்கம்

13. பட்டிமன்றம்:
    "நமது சமூகத்தின் வாழ்க்கைக்குச் சீதனம் அவசியமா? இல்லையா?"

| அவசியம்: | அவசியமில்லை: |
|---|---|
| ந. விஜயசுந்தரம் | தி. வேல்நம்பி |
| பு. ஸ்ரீஸ்கந்தராசா | எஸ். கே. சண்முகலிங்கம் |
| தி. செல்வமனோகரன் | கோப்பாய்-சிவம் |

நடுவர்: திரு. சி. சிவநேசன் (சட்டத்தரணி)

விளம்பர அன்பளிப்பு:
புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம்

[சி-7204]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



மலர்வு: 28 — 11 — 1927
உதிர்வு: 29 — 12 — 1993

## அமரர் சி. நடராசா
(மலேயன் பென்சனியர்)

எங்கள் குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்து, எம்மை பண்போடும், பாசத்தோடும் வாழ வைத்த அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு மாதம் ஒன்று மறைந்தாலும் உங்கள் பாசநினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்.

''நடேசபதி'',
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

(29133)

---

உ

# தசாக கிரஹயக்கு அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 9ஆம் நாள் (22-01-94) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அச்சுவேலி, தம்பாலை.

## பிரம்மஸ்ரீ நா. கந்தசாமி ஐயர்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்: **31-01-94** திங்கட்கிழமை காலை **11** மணி
ஏகோதிட்டம், மாசியம் — **01-02-94** செவ்வாய்க்கிழமை.
சபிண்டீகரணம் — **02-02-94** புதன்கிழமை.
கிரஹயக்கும் — **03-02-94** வியாழக்கிழமை.

மேற்படி கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

வாய்க்கால் தரவை
பிள்ளையார் கோவிலடி,
நீர்வேலிச் சந்தி,
நீர்வேலி.

(29134)

---

# யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம்

## பிரதேச கருத்தரங்கு நிகழும் விவரம்

| | |
|---|---|
| 29 — 01 — 94 | சாவகச்சேரி மகளிர் கல்லூரி |
| 30 — 01 — 94 | உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் |
| 04 — 02 — 94 | யூனியன் கல்லூரி மருதனார்மடம் |
| 05 — 02 — 94 | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் |
| 06 — 02 — 94 | சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம் சங்கானை |
| 12 — 02 — 94 | மானிப்பாய் மெமோரியல் மானிப்பாய் |
| 19 — 02 — 94 | நெல்லியடி ம ம. வித்தியாலயம் |
| 20 — 02 — 94 | ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி புத்தூர் பிற்பகல் 3மணி கோப்பாய் நாவலர் வித்தியாசாலை |
| 25 — 02 — 94 | யாழ் புனித சாள்ஸ் ம. வி. யாழ்ப்பாணம் |

மேற்குறிக்கப்பட்ட திகதிகளிலும் இடங்களிலும் அமைக்கப்படும் கருத்தரங்குகளில் சங்கம் எடுத்துள்ள ஓய்வூதிய மீளாய்வு நடவடிக்கை, இடம் பெயர்ந்த ஓய்வூதியருக்கான நிவாரண நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடலும் விளக்கமும் அளிக்கப்படும்.

முக்கிய கவனிப்பு:

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்படும் ஓய்வூதியர் நிவாரண விண்ணப்பப் படிவம் வழங்கப்படும். படிவம் ரூபா 3/- செலுத்தி விவரங்களை அறிவிக்கப்படும் திகதிக்கு முன் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

அங்கத்தவர்களும் மற்றும் அரச ஓய்வூதியர்களும் தவறாது தாங்கள் வசிக்கும் பகுதிகளில் சமுகமளிக்கும் படி அன்புடன் வேண்டுகின்றோம்.

எஸ். ஆர். சண்முகரட்ணம்,
தலைவர்

க. சி நமசிவாயம்
செயலாளர்.

[சி-2062]

---

# வீட்டுக் கிருத்திய அழைப்பும் 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்



மலர்வு: 11 — 11 — 1970
உதிர்வு: 31 — 10 — 1993

## மயில்வாகனம் சிவநேசிகன்
(சிவா)

இன்று அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெற இருப்பதால் அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(29137)

---

விற்பனைப் பிரதிநிதிகள்

# உடன் தேவை

புதிதாக தொடங்கவுள்ள தயாரிப்புக்களான ரொபி (சுவீற்ஸ்), சொக்கிலேற், கோடியல் வகைகள் மற்றும் எமது தயாரிப்புப் பொருள்களை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை. சம்பளத்துடன் கூடிய கமிஷனும் வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும்.

**கன்விற் சுவீற்ஸ்**
க. சுந்தரலிங்கம்,
குளப்பிட்டி றோட்,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(6926)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பிறைன்ட் ஐயாத்துரை ஞானம்மா
(சங்கானை)

திருமதி பிறைன்ட் ஐயாத்துரை ஞானம்மா நேற்று (27-01-94) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிறைன்ட் ஐயாத்துரையின் [மாஸ்டர்] அன்பு மனைவியும், சபாரட்ணம் [ஓய்வூதியர், பெருந்தெருக்கள் திணைக்களம்], அற்புதரட்ணம் [கனடா], ஜெபரட்ணம் [டுபாய்], ராணி, ரூபி, ரஞ்சி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், விடா [கனடா] நேசராணி, விக்கினேஸ்வரன் [ஓய்வு பெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி], ஸ்ரீமணி [டுபாய்], முத்துராஜா [சங்கானை ப. நோ. கூ. சங்கம்], கிறிஸ்டோபர் [கனடா] ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று காலை 9 மணிக்கு தேவாலய வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S M முத்துராஜா

தேவாலய வீதி,
சங்கானை.

[29139]

## கதிரவேலு கனகலிங்கம்
(லிங்சர் - சூராசி)

செம்பாடு, காரைநகரைச் சேர்ந்த கதிரவேலு கனகலிங்கம் (லிங்கர் - சூராசி) 22 - 01 - 1994 இல் காரைநகரில் காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கனகரத்தினம்
(சகோதரர்)

[29131]

## சரவணமுத்து சபாபதி
(ஓய்வு பெற்ற மலேயன் பென்சனியர்)

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற மலேயன் பென்சனியர் சரவணமுத்து சபாபதி நேற்று வியாழக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (கல்வி அதிகாரி-முல்லைத்தீவு), நாகேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி, திருச்செல்வம் (ஓய்வூதியர்), பஞ்சலிங்கம் (R M P-குருநாகல்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலீபன், பார்த்திபன், உமா, சத்தியன், தனஞ்செயன், ஜீவா, நீரஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

காரைக்கால் வீதி,
இணுவில்.

(29138)

## பொன்னம்பலம் தையலம்மா

திருமதி பொன்னம்பலம் தையலம்மா நேற்று (27-01-94) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் திருநெல்வேலி வடக்கு பலாலி வீதியில் வசித்த காலஞ்சென்ற த. பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற கணக்காளர் - புகையிரதப் பகுதி) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாசனி, தனபூஷனி, காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் அன்புத் தாயாரும், பே. பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்), இ. சுவாமிநாதன் (உரிமையாளர், கனகதாரா அச்சகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி (யாழ் பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம்), யதுகுலன், அபர்ணா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை (27 - 01 - 94) மாலை 4 மணிக்கு திருநெல்வேலி மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பே. பாலசுப்பிரமணியம்

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

[29135]

---

# ஆலயங்களில்

சுழிபுரம் - கம்பனை ஸ்ரீ இராச இராசேஸ்வரி ஆலய அலங்கார உற்சவத்தின் இறுதி நாளாகிய நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரியில் பழமை வாய்ந்த விறுமர் ஆலயத்தில் சாவகச்சேரி நகர சபையால் இன்று விஷேட அபிசேகமும், பொங்கல் குளிர்த்தியும் நடத்தப்படவுள்ளன.

இந்த ஆலயத்திற்கு புதிய வீதியொன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆலய மணிக் கோபுரம், ஆலய உட்புற வெளிப்புற சுவர்கள் ஆகியன வர்ணம் தீட்டப்பட்டும் உள்ளன. (உ-31)

# சிப்பாய் மரணம்

திருகோணமலை மாவட்டம் இறக்கக்கண்டியில் அண்மையில் யானை தாக்கி சந்திரா சரத்குமார என்ற இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார்.

படுகாயங்களுடன் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர் மறுநாள் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

# யாழ்.பல்கலை மாணவன் கைது

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒருவர் கடந்த 17 ஆம் திகதி நீர்கொழும்பில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லையா ஸ்ரீதரன் என்ற மாணவரே கைது செய்யப்பட்டார்.

(உ-5)

---

இனப்பிரச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படாமலேயே உள்ளன. இதுவரை ஆட்சி செய்த எந்தவொரு அரசும் அரசியல் தீர்வை காண முயற்சிக்கவில்லை இதுவே தமிழர் ஆயுதம் ஏந்தக் காரணம்.

தெற்கிலிருந்து வெளியாகும் எந்தவொரு தேசியப் பத்திரிகையும் யாழ்ப்பாணப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பான உண்மை நிலைபற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதில்லை. — என்றார். (உ-6

---

# உடன் தேவை

அனுபவம் ஆற்றல் உடைய சந்தை விற்பனையாளரும், மாட்டு பராமரிப்பாளரும் தேவை.

மேஜர் பிரதாப்,
செட்டி பண்ணை,
இராஜ வீதி, கோப்பாய்.

(29136)

---

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சங்கரப்பிள்ளை தில்லையம்பலம்

காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் சங்கரப்பிள்ளை தில்லையம்பலம் 27 - 01 - 94 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சங்கரப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சதாசிவம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, தருமரத்தினம், கமலேஸ்வரி, தனராசரத்தினம், சண்முகரத்தினம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும்—

மார்க்கண்டு, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌதமி, சுபாஷினி, ஜகந்தீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகம், காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமசாமி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆனைக்கோட்டை றோட்
குளப்பிட்டி
கொக்குவில்
(கொக்குவில் தபாற்கந்தோர் அருகில்)

(29141)

---

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள கரமான நிகழ்ச்சிகளை அதிநவீன
(MIXING) கமரா மூலம் வீடியோ படம் பிடிக்க

★ திரு வீடியோ விஷன் ★

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(சி-7136)

இப்பத்திரிகை [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-01-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org